பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 09 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் ஆதாயங்களை கருத்தில் கொள்ளாமல், மாணவர்கள் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேசிய கல்விக்கொள்கையை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

2. குரங்கு அம்மை பாதிப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா 5-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

அரசியல் ஆதாயங்களை கருத்தில் கொள்ளாமல், மாணவர்கள் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேசிய கல்விக்கொள்கையை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் திரு தர்மேந்திர பிரதான் சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

விரிவான கலந்தாலோசனைகளுக்கு பிறகே தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மொழியில் கல்வி கற்பது, போட்டித்தேர்வுகளை தமிழில் எழுதுவது, தமிழில் பாடப்புத்தகங்களை உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை கொண்ட தேசிய கல்விக்கொள்கையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் எதிர்ப்பது ஏன் என்றும் திரு தர்மேந்திர பிரதான் வினவியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில், மக்கள் மருந்தகத்தை திறந்துவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) - 31 செகண்ட்ஸ்)*

ஊடகங்கள் ஆக்கப்பூர்வமான செய்திகளை கொண்டு செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

நாட்டில், குரங்கு அம்மை நோய் ஒருவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த நோய் அறிகுறிகளுடன் தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு தற்போது அதன் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட நபரின் உடல்நிலை சீராக உள்ளதாகவும், இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>

இதற்கிடையே, குரங்கு அம்மை பாதிப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை மாநில அரசுகள் தீவிரப்படுத்துமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

குரங்கு அம்மை குறித்து தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் அதில் அறிவுறுத்தியுள்ளார்.

குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்டால், அதனை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மருத்துவமனைகளில் இந்நோய் சிகிச்சைக்கென சிறப்பு பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நோய் பாதிப்பு சூழல் குறித்து மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், இதுதொடர்பாக, மாநில அரசுகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அபூர்வ சந்திரா அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

*<u>(சவுண்ட் டைப் - உதயநிதி – 44 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஒடிஷா மாநிலம் பூரி அருகே இன்று கரையை கடந்ததாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதை தெரிவித்த அவர், இது படிப்படியாக வலுவிழக்கக்கூடும் என்றார்.

*<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) – 17 செகண்ட்ஸ்)</u>*

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

*<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) – 38 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

பெரம்பலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

----- ----

தருமபுரி மாவட்டம் பைஸூஅள்ளியில் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கான வங்கிக்கடனுதவிகளை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று வழங்கினார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் அறிவுறுத்தினார்.

--------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் சுமார் 45 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக்கடன் மற்றும் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பத்து ரூபாய் நாணயத்தை வாங்க மறுக்கும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி சந்திரகலா எச்சரித்துள்ளார்.

---------

திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ராஜி முன்னிலையில் பக்தர்கள் காணிக்கையாக அளித்த தங்கத்தை தரம் பிரித்து அளவிடும் பணி தொடங்கியது.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் இன்று முதல் காவிரி ஆற்றங்கரைக்கு எடுத்துச்செல்லப்பட்டு கரைக்கப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா 5-1 என்ற கோல் கணக்கில், ஜப்பானை வென்றது.

சீனாவின் **Hulunbuir** –ல் நடைபெற்ற இப்போட்டியில், **Sukhjeet Singh** இரண்டு கோல் அடித்தார்.

அபிஷேக், சஞ்சய் மற்றும் உத்தம்சிங் தலா ஒரு கோல் அடித்தனர்.

------------

ஆசிய சப்-ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா எட்டு தங்கம், ஐந்து வெள்ளி, ஒன்பது வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற இப்போட்டியின், மகளிர் 33 கிலோ எடைப்பிரிவில் **Deepali Thapa** –வும், 35 கிலோ எடைப்பிரிவில் **Bhoomi-**யும், 37 கிலோ எடைப்பிரிவில் **Nischal Sharma** –வும், 43 கிலோ எடைப்பிரிவில். **Raki** –யும், 52 கிலோ எடைப்பிரிவில் **Naitik-**ம், 70 கிலோ எடைப்பிரிவில் **Gurseerat Kaur** –ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

61 கிலோ எடைப்பிரிவில் தியா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

ஜெர்மனியில் நடைபெற்ற உலக காதுகேளாதோருக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஏழு தங்கம், ஏழு வெள்ளி, ஆறு வெண்கலப்பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது.

--------------

**Inter Continental** கோப்பைக்கான கால்பந்து போட்டியில் இந்தியா இன்று சிரியாவை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-----------

சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி, **Macao**-வில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் மணிக்கா பத்ரா உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

***<<<<<END>>>>>***